328.403
V4
PB

உண்மை ஐக்கியமே ஜெயம்

# வட்டுக்கோட்டைப் பாராளுமன்றப் பிரதிநிதியின் அறிக்கை

ARCHIVES

JAFFNA COLLEGE UNDERGRADUATE
1 - NOV 1972

வி. வீரசிங்கம், B. A., J. P.; M. B. E., M. P.
வட்டுக்கோட்டைப் பிரதிநிதி, அகில இலங்கை ஐக்கிய
மகாசபைத் தலைவர், அகில இலங்கைச் சைவ
வாலிபர்சங்கத் தலைவர், வடபகுதி ஐக்கிய
மேற்பார்வைச்சபைத் தலைவர், மானிப்
பாய் இந்துக்கல்லூரியின் மாஜி
பிரதம ஆசிரியர்.

328.403
V4
PB

# வட்டுக்கோட்டை வாக்காளர்களுக்கு

அவர் பிரதிநிதி

# திரு. வி. வீரசிங்கம் சமர்ப்பிக்கும்

# அறிக்கை

சகோதர சகோதரிகளே,

வணக்கம். கடவுள் கிருபையினுலும் உங்கள் அன்பினுலும் உங்கள் பிரதிநிதியாகக் கடந்த 3 வருஷம் 8 மாசம் வரையில் தொண்டாற்றினேன். நீங்கள் எனக்கு வாக்களித்து என்னைப் பிரதிநிதியாக்கினதற்காகத் துதி கூறுகிறேன். நான் உங்களுக்காகவும் தமிழுக்காகவும் என்ன செய்தேனென்றதைப் பற்றி உங்களுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது என் கடன் என்று நினைத்து இதைச் செய்கிறேன். தயைகூர்ந்து இதை வாசித்தபின் உமது உற்றூர் உறவினர் முதலியோருக்கும் காட்டும்படி கேட்கிறேன். நான் பல காரியங்களில் முன்மாதிரியான சீவியம் செய்தபடியால், இதுவும் நான் செய்ய ஏவப்பட்டேன். அன்பாய் ஆதரியுங்கள்

## தமிழுக்கும் தமிழருக்கும் செய்தவை

நான் பாராளுமன்றத்திற்குப் போய்ச் சில மாதங்களுள் சிங்கள அங்கத்தவர் சிலர் சிங்களத்திலேயே பாராளுமன்றத்திற் பேசத் தொடங்கினுர்கள். அவர்கள் அப்படிச் செய்வதினுல் தங்கள் மொழிக்கு ஒரு விசேஷ மரியாதை கொடுக்க வேண்டுமென்று தொடக்கத்திற் செய்து தங்கள் பாஷை அரச பாஷையாய் வரவேண்டுமென்றும் விரும்பினுர்கள். அவ்வேளையில் எமது பாஷை யழியாமல் அரண் செய்துகொள்ள வேண்டுமென்றும், அதுவரையும் சிங்களம் அரச பாஷையாய் வராமற் பின்போட்டுத் தடுக்க வேண்டுமென்றும், உணர்ந்தேன். அதற்காக நான் எடுத்தவழிகள் :-

1 சிங்களமறியாத் தமிழர் பாராளுமன்றத்திலிருக்கும் பொழுது, சிங்களவர் சிங்களத்தில் பேசுவது பல விதத்தாலும் சரியல்ல வென்றும், பாராளுமன்றம் குடியரசுமுறை யனுசரியாது தமிழருக்கு விளங்காத பாஷையிற் பேசுவது மிகவும் தப்பிதம் என்றும் பலமுறை பேசினேன்.

2 அதையும் கவனியாது சிங்களத்தில் பேசியபொழுது பாராளுமன்றம் மறுநாளுக்கு ஒத்திவைத்த பொழுதில் (adjournment time) இலங்கைக்கு ஒரு ஆபத்து வந்திருக்கிறதென்றும் ஒன்ருயிருந்த இலங்கை பிளவுபடப் போகிறதென்றும், சிங்களத்தில் பாராளுமன்ற அங்கத்தவர் பேசினுல் தமிழர் அங்கத்தவராயிருப்பது பிரயோசனமில்லை யென்றும் சொன்னேன். ஒருவரும் மறுமொழி கொடுப்பாரில்லை. மற்றத் தேசங்களிற் செய்வது போன்று உடன் மொழிபெயர்ப்பு வசதிகள் செய்ய வேண்டுமென்றும் ஒரு பிரேரணை சமர்ப்பித்தேன். அதற்குத் தடையேற்பட்டது.

3 திரு. S. W. R D. பண்டாரநாயகவின் கட்சி சிங்களத்தில் ஒழிய ஆங்கிலத்தில் பேசப்படாதென்ற கோரிக்கையினுல் ஒருநாள் முழுவதும் சிங்களப்பேச்சே நடந்து கொண்டிருக்க நான் எழுந்து சபாநாயகரைக் கேட்டேன் "மன்றப் பிரமாணப்படி இவர்கள் எல்லாரும் சிங்களத்தில் பேசமுன் உத்தரவு உம்மிடத்தில் கேட்டார்களா?" அவர், பிரமாணப்படி உத்தரவெடுக்காவிட்டாலும், சிங்களச் சுருக்கெழுத்தாளர் தாராளமாய் இருப்பதால், தான் பொதுவாகப் பேச உத்தரவு கொடுத்ததாகச் சொன்ஞர். அவ்வேளை நான் தமிழிற் பேசப்போகிறேனென்று கேட்டு, முதல் முதலாகத் தமிழிற் பேசினேன்.

4 அதன்பின் சபாநாயகர் கட்சித் தலைவர்களையும் மற்றவர்களையும் அழைத்து யோசனை செய்து, எவரும் சுயபாஷையிற் பேசினுல் அதையாராவது விரும்பினுல்

சுருக்கமாக இங்கிலிசில் சொல்ல வேண்டுமென்றும் தீர்மானம் ஏற்பட்டது மாத்திரமல்லாமல், உடன் மொழிபெயர்ப்புக் கருவியும் அமைக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அக்கருவி இப்போது உண்டு ஆனால் உபயோகத்தில் வரவில்லை.

5 சிங்களத்தைக் கெதிப்பண்ணி இராசபாஷையாக்கினால் சிங்களம் முழு இலங்கைக்கும் அரசபாஷையாய் வர மாட்டாதென்றும், சிங்களத்தை உண்மையாய் நேசிக்கிறவர்கள் அதை இயற்கையாய் வளரவிட வேண்டுமென்றும், கண்டி இராசன் காலத்தில் சிங்களமும் தமிழும் சேர்ந்த ஒரு பாஷை உண்டாயிற்றென்றும், ஒருகாலம் அப்படியான ஒரு பாஷை வர இடமுண்டென்றும், அப்போது அப்பாஷையைத் தமிழர் தமிழ் என்றும், சிங்களவர் சிங்களமென்றும், கொள்ளுவாரென்றும், இலங்கையில் மொழி யொற்றுமை உண்டு பண்ணலாம் என்றும், பாராளுமன்றத்திற் கூறினேன். ஏன் இப்படிச் சொன்னேன் என்பதை உணராமல், என்னைப் பல மேடைகளிற் பரிகாசம் பண்ணினவர்களுமுளர்.

6 இன்னும் சிங்களம் இராச பாஷையாய்ச் சீக்கிரத்தில் வருவதைத் தடுக்கும் நோக்கமாக, பர்மாவின் அரச தூதர் சிங்களம்தான் இலங்கையின் பெருந் தொகையினர் பாஷையானபடியால் இராசபாஷையாக வேண்டுமென்று புத்தமத வகுப்புப் பரிசளிப்புக் கூட்டமொன்றில் பேசியபொழுது, நான் பாராளுமன்றத்தில் ஒரு தேச அரசதூதர், தான் போயிருக்கும் தேசத்தின் அரசியற் காரியங்களிற் தலையிடுவது மிகவும் தப்பிதம் என்றும், அவ் அரசதூதர் இன்டொனீசியாவில், மிகவும் குறைந்த தொகையினரது மலாய்ப் பாஷை அரச மொழியாய் வந்ததும் அறியாதவராய் இருத்தல் வியப்பைத் தருகிறதென்றும் சொல்லி, அரசதூதரை எச்சரிக்கை செய்ய வேண்டுமென்றும் கேட்டேன்.

7 தமிழ்ப் பாஷையைக் காக்கும் நோக்கமாகத் தமிழ்ச் சர்வகலாசாலை யொன்றும் சிங்களச் சர்வகலாசாலை ஒன்றும் வேண்டுமென்ற பிரேரணை யொன்றை இரு முறை சமர்ப்பித்து, இரண்டாம் முறை ஒருவரைத் தவிர மற்றெல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கௌரவ மந்திரியார் யாழ்ப்பாணத்தில் ஏதாவது ஒரு கல்லூரி தற்காலிகமாக மத்திய (Intermediate) வகுப்புகளை வைக்க தாம் உதவி புரிவதாகவும், கூடியளவு சீக்கிரத்தில் சர்வகலாசாலையாக்கலாம் என்றும் என்னிடம் சொன்னார். சிங்களத்திலே உயர்தரப் படிப்பு முடியாதென்றும் தமிழில் முடியுமென்றும் அறிக்கை வந்ததும், தடையேற்பட, பலாலி உபாத்திமார் பயிற்றப்படும் கலாசாலையில் தமிழ் மத்திய வகுப்பும் (Intermediate) மகஹறகமத்தில் சிங்கள மத்திய வகுப்பும் சீக்கிரத்தில் நிறுவப்பட்டாலொழிய சுவபாஷைக் கல்வித் திட்டம் சித்தியாகாது என்று கூறினேன்.

8 இலங்கைச் சர்வகலாசாலையில் சுவபாஷாவில் படிப்பிக்க, குறைந்தது இருபத்தைந்து வருஷத்திற்கு முன் முயற்சி எடுக்கக்கூடாதென்றும், ஆங்கில மூலம் கற்பித்தாலொழிய இலங்கை பிற்போக்கடைந்து விடுமென்றும் சொன்னேன்.

9 நான் பாராளுமன்றத்திற்குப் போனபின் ஒவ்வொரு வரவு செலவுத்திட்ட (Budget) ப் பேச்சுகளில் யாழ்ப்பாணத்தில் ஒரு தொழிற் பாடசாலை அவசியம் நிறுவப்பட வேண்டுமென்று சொல்லியும், கௌரவ மந்திரியார் பண்டா அவர்களுடன் பேசியும் சீக்கிரத்தில் நிறுவப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் எல்லாம் செய்தாயிற்று.

10 காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலைக்கு இன்னுமோர் சூளைவாய் (Kiln) தேவையைப்பற்றி ஐயுறவு ஏற்பட்டபொழுதும், காங்கேசன்துறைத் துறை

முகத்தைப்பற்றி ஐயுறவு ஏற்பட்டபொழுதும், என் பேச்சினதும் கேள்வியினதும் பலாபலனாக மந்திரி வர்க்கத்தினர் அவ் ஐயுறவுகளைத் தீர்த்திருக்கிறார்கள்.

11 வெண்காய விளைவிற்குப் பங்கம் வரக்கூடிய செயல்களைக் கண்டித்தும் திருத்தியும் இருக்கிறேன்.

12 பாராளுமன்ற அங்கத்தவர் தொகையைக் கூட்ட வேண்டுமென்ற பிரச்சினையை நிர்வாகசபையிலும் பாராளுமன்றத்திலும் பல நியாயங்களைக் காட்டி ஒத்திவைக்கப் பண்ணினேன். தொகை கூடினால், கூடிய சிங்கள அங்கத்தவர்களும், குறைந்த தமிழ் அங்கத்தவரும் சேர்க்கப்படுவார்.

13 காணி அபிவிருத்திப் பகுதியிலும், தபாற்கந்தோர்ப் பகுதியிலும், சுகாதாரப் பகுதியிலும் அறிந்தோ அறியாமலோ நடந்த தமிழர் புறக்கணிப்பைக் கௌரவ மந்திரிமார் மூலம் கெதியிற் தீர்த்திருக்கிறேன். பால் அபிவிருத்திச் சபை (Board) யார் காட்டிய சாதி வித்தியாசம், எவ்வித பரிகாரத்திற்கும், மாறுதிருந்தமை பற்றிப் பாராளுமன்றத்திற் பேசியும் வாய்க்கவில்லை. பொலிஸ் பகுதி சிங்களப் பாஷைக்குக் காட்டிய விசேஷ சலுகையைப்பற்றி எத்தனையோ முறை முயற்சித்து, கடைசியாய் அரசாங்க சேவை அதிகார சபை, தமிழுக்கும் அச் சலுகையைக் கொடுப்பதாகக் கசெற் பத்திரிகையில் வெளியிட்டது.

14 சோதனைகளில் தமிழருக்குப் பாரபட்சம் காட்டுகிறார்களென்று சொல்வதின் சரி பிழையை அறியும் பொருட்டும், பொதுவாகச் சோதனைகளில் நடக்கும் பிழைகளைக் கண்டுபிடித்து நிவிர்த்தி பண்ணும் படிக்கும், அதற்கேற்க புள்ளி விபரப் பகுதி அல்லது ஸ்திதி ஆராய்ச்சிப் பகுதி (Statistical Branch) சோதனை லாகாவுடன் அமைக்கப்பட வேண்டுமென்று பிரேரணை கொண்டுவந்தேன். பிரேரணை ஏற்கப்பட்டு அப்படி ஒரு பகுதி இப்போது

அமைக்கப்பட்டிருக்கிறது. அப்பகுதியில் ஒருவர் இருவரை அமெரிக்காவுக்கு அனுப்பிக் கல்வியில் ஸ்திதி ஆராய்ச்சியைப்பற்றி விசேஷ பயிற்சி பெறப்பண்ண வேண்டுமென்று நிரந்தரக் காரியதரிசியாரிடம் சொல்லியிருக்கிறேன்.

15 இலங்கையிற் சிங்களப் பள்ளிக்கூடங்களில் தமிழ் படிப்பிப்பதற்கும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் சிங்களம் படிப்பிப்பதற்கும் விசேஷ வசதிகள் செய்யப்பட வேண்டுமென்ற என் நிர்ணயம் அரசாட்சியாரின் அங்கீகாரம் பெற்றது. கல்வி மந்திரியாவர்கள் அதை ஏற்றுத் தான் அதை இப்பொழுதும் வேண்டிய போது செய்ய ஆயத்தமாயிருக்கிறாரென்றும் பணமுடை நீங்கியவுடன் அதற்கேற்ற ஆசிரியரைப் பயிற்ற முயற்சியெடுப்பதாகவும் சொன்னார்.

இதன்பின் இலங்கை முழுவதற்கும் பொதுவான காரியங்களில் நான் விசேஷமாக, உங்கள் பிரதிநிதியாயிருந்த போதிலும் செய்தவைகளைக் கூறுவேன்.

1 வெளிநாட்டுக் கொள்கைகள் ஆராயப்படுங் காலமெல்லாம் தென்கிழக்கு ஆசியாப் பகுதியிலுள்ள நாடுகளெல்லாம் விசேஷ ஐக்கியம் பூண்டவர்களாக ஆக்க வேண்டுமென்றும், திரு. கௌரவ சேனநாயகவின் "மத்தியா பாதையின்" நோக்கமே பாண்டுங் சம்மேளனத்தை உருவாக்கியதென்றும் கூறினேன்.

2 இந்தியருக்குப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் கொடுக்கத் திட்டம் திருத்தப்படும் வேளையில், நான் இந்தியக் குடியரசு நிர்வாகசபைக் காரியதரிசிக்கு, இந்தியர்கள் உண்மையாக இலங்கைப் பிரசா வுரிமையை விரும்புகிறார்களா வென்றும் அப்படி விரும்பினால், இந்தியருக்குப் பிரதிநிதித் தத்துவத்திற்காகத் தயாரிக்கவிருக்கும் வாக்காளர் இடாப்பைப் பகிஷ்கரிப்பார்களா என்றும் ஆம் அல்லது இல்லையென்று வதல். கூற வேண்டுமென்றும் கேட்டேன், அவ்வேளையில்

ஆளும் கட்சித் தலைவருக்கும் நான் அச் சட்டங் களுக்கு மாருக வாக்களிப்பேன் என்றும் எழுதி யிருந்தேன். விகிதஞர் அப்படியான பதிலொன்றுங் கொடாதபடியால் நியாயம் காட்டி அத் திருத்தங்களை அங்கீகரித்தேன்.

3 நான் பாராளுமன்றத்திற்குப் போன முதல் ஆண்டி லேயே இலங்கையில் ஒரு பொருளாதார ஆலோசனைச் சபை (Econmic Advisory Council) இருக்க வேண்டுமென்றும், அதன்பின் ஒவ்வொரு வரவுசெலவுத் திட்டப் பேச்சுகளிலும் பொருளாதார அமைப்பு (Econmic Planning) சீர்திருத்தப்பட வேண்டு மென்றும், திறைசேரி (Treasury) ப் பகுதியார் எப் படிக் கந்தோர்களின் செய்வன்மையைக் கூட்ட வேண்டுமென்றும், பாராளுமன்றத்திற்குச் சமர்பிக்கப் படும் வரவு செலவுத் திட்ட அமைப்பு மாற்றப்பட வேண்டுமென்றும் பேசினேன். நான் சொன்னதின் பிரகாரமாகத் திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன் னும் ஏற்படும்.

4 சிறு குற்றங்களை அசட்டைபண்ணி விடுவதாற் பெரும் அபராதங்கள் இலங்கையிற் கூடுகிற தென்றும், இக் குற்றங்களைக் கவனிக்கவேண்டிய பொலிஸ் உத்தியோகத் தரும், விதானைமாரும், மிகவும் குறைந்த சம்பள மெடுப்பது செய்வன்மை குன்றுவதற்கு ஒரு நியாய மென்றும், இப்பதவிகளின் கீழ் உத்தியோகத்தர் தானும் உச்ச பதவியடைய இடமிருக்க வேண்டு மென்றும் பேசினேன். சம்பளம் சலுகைகள் உயர்த் தப் பட்டிருக்கின்றன.

5 குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தியடைய, ஓர் ஆராய்ச்சி நிலையத்தின் அத்தியாவசியத்தை என் நிர்ணயத்தால் அரசாட்சியார் அங்கீகாரம் செய்தனர். நான் அந்த நிர்ணயத்தில் எடுத்துக் காட்டிய பிறதேச

ஆராய்ச்சி நிலையங்கள் செய்யும் வேலையை இங்கே செய்வதற்கும், மெக்சிக்கோ ஆராய்ச்சிச்சாலை அமைப்பைப் பின்பற்றி, ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மெக்சிக்கோ இலங்கையல்ல, இலங்கைக்கு ஏற்றபடி நிலையங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், பணமில்லாத் தன்மையால், தென்கிழக்கு ஆசியாத் தேசங்களுடன் ஒற்றுமைப்பட்டு ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விசேஷ ஆராய்ச்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளில் தென்கிழக்கு ஆசியா நாட்டார் போய்ப் படிக்க ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன்.

6 எந்த உத்தியோகவர்க்கத்தினராயினும், கீழ்ப்படியிலுள்ளவர்களுடைய, விசேஷமாய், பொலிஸ், கூட்டுறவுப் பகுதி ஆரம்ப உபாத்தியாயர், விதானைமார், வேலை கஷ்டமானதும் உத்தரவாதம் நிரம்பியதாயு மிருக்கிறபடியால் அவர்கள் சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்றும் சுவபாஷா உபாத்திமார், சுவபாஷையிலும் ஆங்கிலத்திலும் தேர்ந்த உபாத்திமார் முதலியோருக்குச் சம்பளமுயர்த்த வேண்டுமென்றும் பேசியுள்ளேன். தேர்தல் காரணமாக சுவபாஷா உபாத்திமார் உயர்வு தடைபெற்றிருக்கின்றது.

7 சுவபாஷா பாடப் புத்தகங்களைச் சீக்கிரமாய் உண்டாக்கிக் கொள்ளும் முறையைப்பற்றிப் பேசியும், கௌரவ மந்திரியாருக்கும் ஒரு மனுச்செய்திருக்கிறேன். நடைமுறையிற் கொண்டுவரப்படவில்லை.

8 ஒரு சித்த ஆயுள்வேத வைத்திய கலாசாலை தமிழ் மாகாணங்களில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று பல முறை பாராளுமன்றத்திற் பேசியிருக்கிறேன். ஆயுள்வேத விசாரணைக் குழுவினரும் அதை அனுசரித்திருக்கின்றனர். கௌரவ மந்திரியாரும் அது செய்யப்பட வேண்டியதென்று ஏற்றுக்கொண்டார்.

9 உத்தியோகமின்மையைப் பற்றிப் பேச்சளவில் நிற்ப தைத் தவிர்க்க, ஏனைய தேசங்கள் எப்படித் தொழி லாளர், தொழில் முதலியவற்றைப் பற்றிய புள்ளி விபரங்கள் (Statistics) சேகரித்து வருகிறதோ அவ் வண்ணம் இலங்கையும் செய்ய வேண்டுமென்றும், அதற்கு ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட வேண்டு மென்றும் பேசியுள்ளேன்.

10 வீடுகள் கட்டுவதற்கு அரசாட்சியார் செய்யும் உதவி, உண்மையாக இருக்கக் குடிநிலம், படுத்துறங்க ஆமான கொட்டில் இல்லாத ஆட்களுக்குப் பிரயோசனப்படுவ தாகவில்லையென்றும் அப்படிப்பட்டவர்களுக்குச் சகா யம் செய்ய வழி தேடவேண்டுமென்றும் கூறியுள்ளேன்.

11 மீன்பிடித் தொழிலாளிகளுக்கு அரசாட்சியார் செய் யக்கூடிய சலுகைகளைப்பற்றி அத் தொழிலாளருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும் கடற்றொழில் ஆலோ சனைச் சபையிலும் பாராளுமன்றத்திலும் பேசி, கடற் தொழிலாளர் வெய்யில் மழை காற்றிலிருந்து ஒதுங் கித் தம் தொழில்புரியப் போகவும், கடற்தொழிலாளர் கடற்கரையில் இராத் தங்கித் தொழிலுக்குப் போக வும் தங்குமடங்கள் கட்டப்பட வேண்டுமென்று பேசி, கடற்றொழில் தலைவரும் மந்திரியாரும் அதை ஏற் றுக்கொண்டனர்.

12 நான் வட்டுக்கோட்டைத் தொகுதியார் அரிசியை ஒரு கொத்து 70 சதத்திற்கு வாங்க ஆயத்தமாக விருக்கி றார்களென்று பாராளுமன்றத்திற் பேசியதாக ஒரு பொய்ப் பிரசாரம் சில அபேட்சகர்கள் செய்திருக்கிறார் கள். நான் உண்மையாக 70 சதமாக்கும் பொழுது, ஒவ்வொருவரும் கூப்பனால் பெறக்கூடிய அரிசியள வைக் கூட்டவேண்டுமென்றும், கொத்து 55 சதமா யிருக்கும்போது, குறைக்கவேண்டு மென்றும் கேட் டிருக்கிறேன். அப்படிச் செய்யப்பட்டது. கொத்து 50 சதமாக விற்பதும் சரியல்ல குறைக்கப்பட வேண்டு

மென்றும் கேட்டிருக்கிறேன். அரிசி விலை அடுத்த தேர்தலின் பின் குறைக்கப்படும் என்று நம்புகிறேன். அதுவும் அன்றி நெல்விளைவிக்கும் தென்கிழக்கு ஆசியநாடுகளெல்லாம் சேர்ந்து ஒரு நெற்கழகம் (Rice Board) ஒன்று கோதுமைக்கு இருப்பதுபோல் அமைத்துக்கொள்ள வேண்டுமென்று மந்திரியாரிடம் கேட்டேன். அதற்குத் தகுந்த ஒரு குழு நியமனஞ்செய்ய யோசனை செய்கிறார்கள்.

13 மகாவலிகங்கையாற்றை வடபகுதி நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகிக்கப்பட வேண்டுமென்னும் நோக்கத்தினால், சங்கானை ஐக்கிய விளைபொருள் சங்கப் பொதுக் கூட்டத்தில், மனேச்சர் திரு. செல்லையா தம்பு அவர்களின் கேள்விப்படி பாராளுமன்றத்தில் எனது நண்பர் திரு. உனம்புவா அவர்கள் ஒரு நிர்ணயம் சமர்ப்பிக்க நான் அதை ஆமோதித்துப் பேசியும், திரும்ப ஒரு நிர்ணயம் கொடுத்தும், காணி அபிவிருத்தி மந்திரியார் ஆலோசனைச் சபையிற் பேசியும், மகாவலிகங்கைப் பள்ளத்தாக்கில் தண்ணிர் உபயோகிக்கப்படும் வழிகளையும் எஞ்சிய தண்ணீரை வடபகுதி அநுராதபுரமீறாய் உபயோகிக்க வழிவகைகளை யெடுக்கும்படி ஒரு மகாவலிகங்கை அபிவிருத்திச்சபை, (Development Board) உண்டாக்கப்பட வேண்டுமென்றும் கேட்டேன். அப்படி ஒரு திட்டம் இருப்பதாகத் தெரிவித்தார்.

14 மோட்டோர் வண்டிகளுக்கு வரியேற்றிய பொழுது பதினாயிரத்திற்குக் குறையாத சாரதிகளின் பிழைப்புக்கு இது கெடுதி விளைவிக்குமென்றும், வாடை வண்டிகளுக்கும், சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் வண்டிகளுக்குப் போல ஏற்றக்கூடிய ஆட்கள் தொகை நியாயமாய் விரிக்கில் வாடை வரி கூடும் என்றும், வரி சீக்கிரத்தில் குறைக்கப்பட வேண்டுமென்றும் எடுத்துக்காட்டி யிருக்கிறேன்.

15 அரசாங்கசேவை அதிகாரசபை (Public Service Commission) யில், சேவையாளர்க்கும் பிரசைகளுக்கும் நம்பிக்கை குன்றுகிறதென்றும், அச்சபை அரசாங்க சேவையாளரைத் தெரிவுசெய்யும் முறையையும் சோதனை நடாத்தும் முறைகளையும் திருத்திக் கொள்ள வேண்டுமென்றும் பாராளுமன்றத்திற் பேசியுள்ளேன்.

16 புதினப் பத்திரிகைகள் தம்கடமையைச் செவ்வனவே புரிகிறதற்கு என்ன தடைகளுண்டு என்றும், மற்றத் தேசங்களில் புதினப் பத்திரிகைகள் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது போல் இலங்கையிலும் ஒரு குழு நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு பிரேரணை சமர்ப்பித்தேன். அது இன்னும் முடிவடையவில்லை.

பிஸ்கால் கந்தோர்களிலிருக்கும் கட்டளை கொடுப்போர் வேலையுள்ள நாளுக்கு மாத்திரம் சம்பளம் வாங்குபவர் நாள்தோறும் வேலை ஸ்தலத்தைத் தரிசிக்கவேண்டுமென்று கட்டளையிருப்பது சரியல்லவென்றும், அவர்களுடைய சம்பளம் சலுகைகள் கூட்டப்படவேண்டுமென்றும் பேசி, வடமாகாண ஏசண்டரும் தாம் செய்யவேண்டுவன செய்வதாகச் சொன்னார்.

வட்டுக்கோட்டைத்தொகுதி பொதுவாக மற்றத் தொகுதிகளிலும் பார்க்கப் பல விதத்தாலும் சௌகரியங்கள் கூடிய வட்டாரமாயிருந்தாலும், அச் சௌகரியங்களை என்னால் இயன்றளவு பின்வருமாறு அதிகரிக்கப் பண்ண முயன்றிருக்கிறேன்

1 நான் பாராளுமன்றத்தில் முதலாவதாக முயற்சித்தது சண்டிரிப்பாய் பண்டத்தரிப்பு ரோட்டையும், பண்டத்தரிப்பு விளான் ரோட்டையும் இணைக்க பத்திமா ஆலயத்தைக் கடந்து ஒரு ரோட்டுப்போட. அது ஒரு கிராமச்சங்க வேலையென்றும் அரசாங்க கட்டுவேலைப் பகுதி அதை உடனே செய்ய முடியாதென்றும் சொல்லியும், பண்டத்தரிப்புக் கிராமச்சங்கத் தலைவரதும்

அங்கத்தவரினதும் உதவியால் அது இப்போது நன்னிலை அடைந்திருக்கிறது.

2 இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இரண்டு சிறு றேட்டுகளை அமைக்கவும், இன்னோர் கிராம அபிவிருத்திச் சங்கக் கேள்விக்கிசைந்து ஒரு சிறு பாலம் போடவும் அரசாட்சியாரிடம் பணஉதவி பெற்றுக் கொடுத்திருக்கிறேன்.

3 சித்திரமேளிக் கிராமமுன்னேற்றச் சங்கக் கேள்விக்கிசைந்து வருஷா வருஷம் வெள்ளத்தால் அழிவுண்ணும் பயிற் சேதத்தைத் தவிர்க்க ஒரு வெள்ள வாய்க்கால் வெட்ட அரசாங்க உதவி என் முயற்சியால் கிடைத்திருக்கிறது. இந்த நிறைவேற்றுவதற்காக மலாயாவிலுள்ள ஒரு நண்பனுக்கு நான் எழுதியது தடைகளை விலக்கியது. அவருக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன். வாய்க்கால் விரைவில் முடிவுபெறும்.

4 வட்டுக்கோட்டைத் தொகுதியில் புதிய தார்போட்ட றேட்டுகள் சிலவுள. அவை ஒவ்வொன்றும் என் முயற்சியால் வந்தது. இன்னுமொரு றேட்டிற்கு ரூபா 5000 தரும்படி கேட்டிருக்கிறேன். அதை வருவிக்குமுன் அடுத்ததேர்தற் காலமாய் விட்டது.

5 வட்டுக்கோட்டைக் கிராமச்சங்க எல்லையுள் இரண்டு றேட்டுக்கும், மானிப்பாய்க் கிராமச்சங்க எல்லையுள் இரு மீன்பிடியாளர் றேட்டிற்கும், அரசாட்சியாரிடம் காசு கொடுக்கச் சிபாரிசு செய்திருக்கிறேன்.

6 எத்தனையோ வருஷக்கணக்காய்த் திருத்தப்படாதிருந்த றேட்டுகள் இப்போது திருத்தப்பட்டிருப்பதைப் பலரும் கவனித்திருப்பார். அதில் பல வாக்காளர் கேள்வியையும், முன்னேற்றச் சங்கக் கேள்வியையும் முன்னிட்டு நான்கேட்க அரசாங்க உத்தியோகத்தர் சிபாரிசுடன் நடந்தன.

7 சுதுமலைக் கிராமச்சங்கக் கேள்வியின்படி சிறு ரோட்டுப் போடுவதற்காகப் பெரிய ரோட்டிலுள்ள மதவு தடையாயிருப்பதால் அதிற் திருத்தம் செய்யும்படி கேட்டு இஞ்சினியர் பார்வையிட்டு, தகுந்த நடபடிக்கை எடுக்கச் செயதிருக்கிறேன்.

8 வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பல பள்ளிக்கூடங்கள் உயர் பதவியடைய நான் சிபாரிசு செய்து சித்தியெய்தினேன்.

9 நவாலியிலிருக்கும் அரசாட்சியார் பாடசாலைக்கு ஒரு கைப்பணி உபாத்தியாயரை உத்தியோகத்தி லமர்த்தவும், சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சாஸ்திர நிலையம் பூரணஸ்திதி யடையவும், கைத்தொழிற் சாலை கட்டுப்படவும் முயற்சித்துச் சித்தியடைந்தேன்.

10 இன்னும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் மூன்று அரசாட்சியார் பள்ளிக்கூடங்கள், அமைக்க முயன்றிருக்கிறேன். சங்கானையில் நிச்சாமத்தில் ஒரு ஆரம்ப பாடசாலையும் கைத்தொழிற் பாடசாலையும் கட்ட அரசாட்சியாரைக் கேட்டுப் பரிசோதகர்கள் பார்வையிட்டனர். அவ்வேளையில் அக்கிராமவாசிகள் தாமாகவே பணஞ் சேர்த்து ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடக்கி அது சைவ வித்தியாவிர்த்திச் சங்கத்தின் பரிபாலனத்தின் கீழ் செவ்வனவே நடைபெறுவது சந்தோஷமான காரியம். மற்ற இரு பாடசாலைகளும் பரிசிலனை செய்யப் படுகிறநிலையில் இருக்கின்றன.

11 வைசூரி நோய் ஆனைக்கோட்டைக் கிராமத்திற் தோன்றிய பொழுது, கிராமவாசிகள் பலரைப் பாதுகாப்புக்காக அரசாங்கத்தார் வெளியேற்றினர். அவ்வேளையில் வேலையிழக்க இருந்த ஆட்களுக்கு அவர்கள் உழைப்பில்லாதிருந்தபடியால், அதற்கேற்ற பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொடுப்பித்தேன். உண்மையாய் வருத்தத்தினுல் பீடிக்கப்பட்ட ஆதர

வற்றவர்களுக்கு, அரசாட்சியார் உதவி நன்கொடை, என் சிபாரிசினால் கொடுத்திருக்கிறார்கள்.

12 மூடப்பட்டிருந்த ஒரு உப தபாற்கந்தோரைத் திரும்பத் திறப்பித்தும், சில்லாலையிலும் சங்கானையிலும் இரு உப தபாற்கந்தோரைத் திறப்பித்தும், இன்னும் விளானில் ஒரு உப தபாற்கந்தோரும் சீக்கிரத்தில் ஸ்தாபிதமாகவும் ஒழுங்கு செய்திருக்கிறேன்.

13 பண்ணைக் கடலணையை அடைத்து 40 அடி வாய்க்காலும் அதற்குமேல் ஒரு பாலமுமிட்டு ஒரு றேட்டாக்க அரசாட்சியார் முயன்றார். அது அப்படிச் செய்யப்பட்டால் நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், சுளிபுரம், சங்கானை, சில்லாலையிலுள்ள மீன் தொழிலாளர்க்கு நட்டமென்றதைத் திரு. கே. சோமலிங்கமவர்கள் எடுத்துக்காட்ட, அதை முதல்வருஷம் தொடங்கித் தடை செய்தும், அதை அப்படி மூடினால் மேற்கூறிய பகுதி மீன் தொழிலாளர்க்கு மிகவும் கஷ்டமென்றும் இரு முறை பாராளுமன்றத்திற் பேசியும், கௌரவ மந்திரியாரை அழைத்துக் காட்டி முறையிட்டும், பலவித முயற்சியெடுத்தும், தை மாசம் 16 ம் திகதி மீன்பிடி கந்தோர்த் தலைவர் மீன்பிடிகாரருக்குக் கஷ்டம் வராமற் தாம் பாதுகாப்பதாக அறிவித்திருக்கிறார்.

14 சங்கானை வாசிகளின் தேவையை உணர்ந்து அவர்களின் வேண்டுகோளின்படி, பாராளுமன்றத்திற் சங்கானைக்கு ஓர் ஆஸ்பத்திரி தேவையென்று பிரேரணை கொண்டுவந்து அதை நிறைவேற்றி, சங்கானையில் ஒரு ஆஸ்பத்திரியை அமைத்து மற்றும் வசதிகளையுஞ் செய்து சீக்கிரத்திற் திறப்பதற்காக ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது. மற்றக் கட்டிடங்களும் முடிந்த பின்னரே திறப்புவிழா நடக்கும்.

15 இத்தொகுதியிலேயுள்ள ஏனைய கிராம ஆஸ்பத்திரிகளில் கூடிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன;

மேற்கூறிய கைங்கரியங்கள் கடவுள் அனுக்கிரகத்தி ஞல் நடைபெற்றன. அவருக்கு ஸ்துதி. சில காரியங் கள் இலேசாய்க் கைகூடுவதும், சில தலைகொண்டு பிறவி ஆடினும் முடியாதிருப்பதும் எனக்கு ஆச் சர்யத்தைக் கொடுத்தன. கௌரவ மந்திரிமார், அவ ரது நிரந்தரக் காரியதரிசிகள், பல கந்தோர்த் தலைவர் கள், யாழ்ப்பாணத்தில் அரசாட்சி ஏச்ண்டர் முதல் பலதுறைத் தலைவர்களும் நான் நீதிமுறையில் முயற் சித்ததினுல் எனக்கு எவ்வளவோ புத்திமதியும் உதவி யும் கொடுத்தார்கள். வட்டுக்கோட்டைத் தொகுதி கிராம நகரசங்கத் தலைவர்களும், காரியாதிகாரி, மற் றும் உத்தியோகத்தர்களும் வேண்டிய உதவிபுரிந்து ஒத்துழைத்தலின் பயனுகத்தான் என் முயற்சிகள் சித்திபெய்தின. அவர்கள் எல்லாருக்கும் என் நன்றி கூறுகிறேன்.

கடைசியாகத் தமிழுக்குச் சம அந்தஸ்து விவாதம் தோன்றி, சிங்கள இராச்சிய பாஷை விவாதமும் வந்து பலவிதத்தாலும் தமிழுக்குக் கஷ்டகாலம் வந் திருக்கிறது. எவ்வாதம், (தன்னிஷ்ட தமிழ்நாட்டு வாதம், சமட்டியில் வாதம்;) மேற்கொண்டாலும், சிங்களம் இராச பாஷையாகுமேல் தமிழருக்குக் கஷ் டங்கள் மிகவேற்படும்.

நான் தன்னிஷ்டவாதியாய் ஆளும்கட்சியிற் சேர்ந்து தொண்டாற்றுவேனென்று உங்களுக்குக் கொடுத்த வாக்கு இதுகாறும் நிறைவேற்றப்பட்டு மேற்கூறிய தொண்டுகளை ஆற்றுவதற்கு அதி உதவியாயிருந்தது. அப்படியே இருப்பதுதான் என் விருப்பம். ஆனுல் தற்போது தமிழருக்குச் சம்பவிக்கவிருக்கும் ஆபத்தை நான் தனித்துநின்று தடுப்பதோ சாந்தி செய்வதோ கஷ்டமான காரியம். ஆனதினுல் நாமெல்லோரும் ஒற்றுமையாயிருக்க வேண்டும்; கட்டுப்பாட்டின் கீழ் ஆழ்ந்த பரந்த யோசனையோடு திட்டம் போட்டுப் பாராளுமன்றத்தில் தொண்டுபுரிய வேண்டும்; என்று

நான் பலமுறை பகிரங்கமாய்ப் பேசியும் எழுதியும் இருக்கிறேன். அதற்கு எடுத்துக்காட்டாக, சில நண்பர்களின் கேள்வியின்படி பாராளுமன்ற அங்கத்தவரும் கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு விட்டார்கள் என்ற நம்பிக்கையினால் நாம் எல்லாரும் ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்பதைக் காண்பிப்பதற்காக, ஆளும் கட்சியில் இருந்து விலகிக் கொண்டேன்.

ஏதோ ஒரு பிரதிநிதித்தத்துவம் வாய்ந்த தமிழர் முன்னணியோ, தமிழர் கழகமோ, என்னைத் திரும்பவும் உங்கள் பிரதிநிதியாக வேண்டுமென்று கேட்டால் நீங்களும் நானும் திரும்பவும் ஒத்துழைக்கலாம். அப்படியான ஒரு ஒற்றுமை வராதிருந்தால், இந்த ஆபத்து வேளையில், என்னால் செய்யக்கூடிய காரியங்களைத் தனித்தென்றாலும் செய்யக்கூடிய ஆற்றலும், அனுபவமும், துணிவும் வசதிகளும் எனக்கு விசேஷமாயுண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள்; பெருமை பாராட்டியிருக்கிறீர்கள். இந்த வேளையில் பதவி வேட்கையாளருக்கு என் நாட்டை இரையாக்கி, தமிழுக்கும், தமிழருக்கும் வரும் ஆபத்தை நான் விலக்க எத்தனியாமலிருப்பது எனக்கும் ஈனம்; உங்களுக்கும் ஈனம்; நீங்கள் என்னில் நம்பிக்கை வைத்து என்னைத் திரும்பவும் உங்கள் பிரதிநிதியாகவரவேணடுமென்று உண்மையாய் விரும்பித் தொண்டாற்றுவீர்களானால், வெற்றி உங்கட்கே. பணிசெய்து கிடப்பது என் கடன். கடவுளுக்கு ஸ்துதி. கடவுள் சித்தம் நடைபெறுக.

மானிப்பாய்,
8-2-56.

இங்ஙனம்
தங்கள் அன்பன்
**வி. வீரசிங்கம்**



ARCHIVES

O. H. M. S.

V. Veerasingam, M. P.
Manipay.